Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW6 Witness for Defence

Defence Court

Name :R.Arun Kumar Caste:

Father's Name :Ramu Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 19th day of December 2023.

(A1 to A3 are present)

முதல் விசாரணை

நான் புதுசத்திரம் பஜனை கோயில் தெரு எண்.471ல் வசித்து வருகிறேன். 14.12.2020 அன்று பூந்தமல்லி செல்வதற்காக புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்தில் நானும் எனது நண்பர் ஆனந்த் ராஜ் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம். அப்போது அங்கு போலீசார் ஒரு கொலை சம்பவம் பற்றி விசாரித்து கொண்டிருந்தார். அப்போது அந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மூன்று நபர்கள் திருநின்றவூர் லட்சுமி தியேட்டர் அருகே உள்ளார்கள் என்றும் அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டும் என்றும் அதற்கு சாட்சியாக இருக்க சொல்லியும் எங்களை அழைத்தார்கள். நாங்கள் போலீசாருடன் சென்றோம். பின்னர் திருநின்றவூர் லட்சுமி தியேட்டர் அருகே சென்ற போது அந்த மூன்று பேர் போலீசாரை பார்த்து ஓடிவிட்டார்கள். அதன் பின்னர் போலீசார் அவர்களை மடக்கி பிடித்துவிட்டார்கள். அவர்கள் மூவரும் அப்போது போலீசாரிடம் தனித்தனியாக வாக்குமூலங்கள் கொடுத்தார்கள். அந்த வாக்குமூலங்களில் நான் இரண்டாவதாகவும் எனது நண்பர் ஆனந்த் ராஜ் முதலாவதாகவும் கையொப்பமிட்டோம். அந்த எனது மூன்று கையொப்பங்கள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுபவை. (எதிரி ராஜா கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் சாட்சியின் கைகொப்பம் மட்டும் அ.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி முத்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியின் கைகொப்பம் மட்டும் அ.த.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சதீஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியின் கைகொப்பம் மட்டும் அ.த.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவர்கள் மூவரும் தங்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் தங்களை அழைத்து சென்றால் கத்தியை ஆஜர் செய்வதாக கூறினார்கள். எதிரிகள் அணிந்திருந்த இரத்தம் தோய்ந்த உடைகளை மூவரும் தனித்தனியாக ஆஜர் செய்தார்கள். அதை போலீசார் கைப்பற்றினார்கள். அது சம்மந்தமாக கைப்பற்றுதல் மகசரில் நான் இரண்டாவதாகவும் எனது நண்பர் ஆனந்த் ராஜ் முதலாவதாகவும் கையொப்பமிட்டோம். ( அந்த மகசர் அ.த.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவர்கள் ஆஜர் செய்த இரத்தம் தோய்ந்த உடைகள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருட்கள். எதிரி ராஜா ஆஜர் செய்த லுங்கி மற்றும் சட்டை (அது சா.பொ.1 வரிசையாகவும் குறியீடு செய்யப்படுகிறது.) எதிரி முத்து ஆஜர் செய்த ஜுன்ஸ் பேன்ட் மற்றும் கருப்பு நிற டீ சர்ட் (அது சா.பொ.2 வரிசையாகவும் குறியீடு செய்யப்படுகிறது.) எதிரி சதீஷ் ஆஜர் செய்த கருப்பு நிற லோயரும், கருப்பு, சிகப்பு மற்றும் நீல நிற டீ சர்ட்டும் (அது சா.பொ.3 வரிசையாகவும் குறியீடு செய்யப்படுகிறது.) அன்று இரவு 07.00 மணிக்கு புதுசத்திரத்திலுள்ள ராஜாவின் வீட்டிற்கு அழைத்து சென்றார். அங்கு அவரது வீட்டினுள் இருந்த மேஜையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். (அந்த கத்தி தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருள் (அது சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). கத்தியை போலீசார் ஒரு மகசர் மூலம் கைப்பற்றினார்கள். (அது அ.த,சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் இரண்டாவதாகவும் எனது நண்பர் ஆனந்த் ராஜ் முதலாவதாகவும் கையொப்பமிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆனந்த் ராஜின் பெரியம்மா நாகம்மாளும் இறந்து போன அசோக்குமாரின் தாயாரான தனபாக்கியமும் உடன் பிறந்தவர்கள். நானும் இறந்து போன அசோக்குமாரும்

நண்பர்கள். நான் புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திர் நின்றிருந்த போது போலீசார் எங்களை அணுகிய விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. திருநின்றவூர் லட்சுமி தியேட்டர் அருகே சென்ற போது மூன்று எதிரிகளும் ஓடியதையும் பின்னர் அவர்களை போலீசார் மடக்கி பிடித்ததையும், போலீஸ் விசாரணையின் போது நான் கூறினேனா என்றால் கூறினேன். புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திறக்கும் வெள்ளவேடு காவல் நிலையத்திற்கும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். வெள்ளவேடு காவல் நிலையத்திலிருந்து புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திற்கு வரும் இடங்களில் கடைகளும் வீடுகளும் உள்ளது. புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் ஒரு ஜன நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்தில் போலீசார் எங்களை அணுகிய போது அந்த இடத்தில் சுமார் 10–15 நபர்கள் இருந்திருப்பார்கள். போலீசார் எங்கள் இருவரை மட்டும் குறிப்பிட்டு அணுகியதற்கான பிரத்தியோக காரணம் ஏதும் இருந்ததா என்றால் இல்லை. நான் இறந்து போன அசோக் குமாருக்கு நண்பர் என்பதினாலும் ஆனந்த் ராஜ் அவருக்கு உறவினர் என்பதினாலும் நாங்கள் அரசு தரப்புக்கு ஏற்றார் போல் பொய் சாட்சியம் அளிப்போம் என்ற எண்ணத்தினால் தான் போலீசார் எங்களை சாட்சிகளாக இருக்க அணுகினார்கள் என்றால் சரியல்ல. புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து லட்சுமி தியேட்டர் சுமார் 8–9 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து லட்சுமி தியேட்டருக்கு நானும் ஆனந்த் ராஜும் போலீசாரின் வாகனத்தில் சென்றோம். எங்களுடன் நான்கு போலீசார் ஆய்வாளருடன் வந்தார்கள். புதுசத்திரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து லட்சுமி தியேட்டர் செல்வதற்கு சுமார் 20 நிமிடம் ஆனது. அந்த 20 நிமிடத்தில் போலீசாரிடம் வழக்கின் விவரங்கள் மற்றும் எதிரிகள் என்ன சொல்வார்கள் மற்றும் என்ன நடைமுறை பற்றி கேட்டு தெரிந்து கொண்டோமா அல்லது போலீசார் சொன்னார்களா என்றால் இல்லை. ஆனந்த் ராஜ் அந்த விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டாரா என்பது எனக்கு தெரியாது. லட்சுமி தியேட்டர் ஆட்கள் நடமாட்டம் மிகுதியாக உள்ள பஜார் தெருவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அங்கேயும் பொது மக்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கிருந்த மற்றவர்களை கூப்பிடாமல் எங்கள்

இருவரையும் போலீசார் அழைத்ததற்கான காரணம் நாங்கள் பொய் சாட்சியம் அளிப்போம் என்பது தான் என்றால் சரியல்ல. நாங்கள் லட்சுமி தியேட்டர் அருகே சென்ற போது அங்கு எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அங்கு ஒரு போலீஸ் பூத் இருந்தது என்றால் சரிதான். அந்த பூத்தில் 24 மணி நேரமும் போலீசார் இருப்பார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும். சா.பொ.1 முதல் 3 வரிசையிலான துணி மணிகள் பொதுவாக கடைகளில் கிடைக்கக் கூடியது என்றால் சரிதான். சா.பொ.4 கத்தி பொதுவாக கடைகளில் கிடைக்கக் கூடியது என்றால் சரிதான். நாங்கள் கையொப்பம் போட்ட ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்டது. லட்சுமி தியேட்டர் அருகே தான் கம்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டது. அங்கு பிரிண்ட் எடுப்பதற்கு வாய்பில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எவரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அவர்களிமிருந்து சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் அது சம்மந்தமாக எந்த ஆவணங்களும் அந்த இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், பின்னிட்டு காவல் நிலையத்தில் போலீசார் ஆவணங்களை தயார் செய்து எங்களிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்று்ம் சொன்னால் சரியல்ல. தற்போது தாக்கல் செய்யப்பட்ட சான்று பொருட்கள் எவையும் ஆவணம் எதுவும் நான் சொல்லியுள்ள நேரத்தில் இடத்தில் முறையில் கைப்பற்ற, தயாரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தினத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர்கள் 12.12.2020 அன்றே கைது செய்யப்பட்டுவிட்டாக்ள் என்றும் அது சம்மந்தமான செய்து 14.12.2020 அன்று தினத்தந்தி மற்றும் தின மலர் நாளிதழ்களில் வந்தது என்றும் சொன்னால் சரியல்ல.